ஒருவர் கிறிஸ்தவராயிருக்க ஆண்டவருடைய சபையின் அங்கமாகையால் அவருடைய பெயரை தரித்துக்கொள்ள வேண்டும், ''கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்'' (ரோ 16:16) ; மேலும் கிறிஸ்தவைப் பின்பற்றும் ஒரு தனிநபராக அவர் கிறிஸ்தவர் எனப்படுகிறார். ''ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.'' (1 பேதுரு 4:16). "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு," (எபெ 3:14, 15). "அவராலேயின்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப் 4:12).

❖ ஒருவர் கிறிஸ்தவராயிருக்க வேண்டுமெனில், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கடவுளை (தேவனை) ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் (யோ 4:24; அப் 20:7), மேலும் அவர் விசுவாசமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் (வெளி 2:10). கிறிஸ்தவராயிருப்பது என்பது கிறிஸ்துவைப்போல இருக்கக் கற்றுக்கொள்வதும், "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு''ம் கற்றுக்கொள்ள வேண்டும் (2 பேதுரு 1:4).

❖ கிறிஸ்தவ வளர்ச்சியின் மிக முக்கியமான காரியங்களில் ஒன்று, தேவனுக்கு கனிகொடுப்பதாகும். இயேசு தன்னுடைய சீடர்களைப் பற்றி கூறுகையில், "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.... நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோ 15:5, 9, 10).

❖ ஒருவர் கிறிஸ்தவராயிருக்க வேண்டுமெனில், கிறிஸ்துவினுடைய அன்பு மற்றும் மனதுருக்கத்தை தானும் பயிற்சி செய்ய வேண்டும். "அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்" (மத் 25:34-36).

இந்த உண்மைகளின் (வசனம்) அடிப்படையில் நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? ஏதோ ஒரு அடைமொழியுடன் கூடிய குறிப்பிட்ட வகை கிறிஸ்தவரல்ல, மாறாக, பைபிள் கூறும்படியான கிறிஸ்தவரா? இல்லையெனில் வேத வசனம் கூறும்படியான ஒரு கிறிஸ்தவராவீர்கள் என்று உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

கிருபையுள்ள வார்த்தை T.V. நிகழ்ச்சிகள்

தமிழன் T.V.

ஞாயிற்றுக்கிழமை காலை 6-45 மணி
வெள்ளிக்கிழமை காலை 6-00 மணி

இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள :

யார் கிறிஸ்தவர்கள் ?

J.C. Choate

தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற

கிருபையுள்ள வார்த்தை

தபால் பெட்டி - 15, அரசரடி, மதுரை - 625 016.

போன் : 92 4421 4421, 92 4431 4431 Email : obey2jesus@gmail.com

"உலகமெங்கும் உள்ள பெரும்பாலான மக்கள், தங்களை கிறிஸ்தவர்கள் என்று உரிமை கோருகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு அநேக விளக்கங்கள் உண்டு; ஆனால் நாம், யார் கிறிஸ்தவர்? என்பதை கவனிப்போம். ஒருவர் எவ்வாறு கிறிஸ்தவராக முடியும்? ஒருவரை எது கிறிஸ்தவராக்குகின்றது? தங்களை கிறிஸ்தவர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிற அனைவரையும், உண்மையிலேயே கிறிஸ்தவர்கள் என்று வேத வசனம் அங்கீகரிக்கின்றதா?

முதலாவது, யார் கிறிஸ்தவர் இல்லை என்று நாம் பார்ப்போம்!

❒ விசுவாசிகள் உள்ள குடும்பத்தில் ஒருவர் மாம்சத்தில் பிறந்ததினாலேயே அவர் கிறிஸ்தவர் அல்ல; எந்த ஒரு குழந்தையும் கிறிஸ்தவராக இருக்க முடியாது.

❒ ஒருவர் கடவுளை (தேவன்) நம்புவதினாலும், கிறிஸ்துவே கடவுளுடைய குமாரன் என்று விசுவாசிப்பதினாலும் மட்டுமே அவர் கிறிஸ்தவர் அல்ல.

❒ ஒருவர் கிறிஸ்துவை கடவுளுடைய குமாரன் என்று அறிக்கையிடுவதினாலும், அல்லது, "கிறிஸ்துவினிமித்தம் தேவன் என்னுடைய பாவங்களை மன்னித்துவிட்டார்" என்று" "அறிக்கையிடுவதினாலும்" மட்டுமே கிறிஸ்தவர் அல்ல.

❒ ஒருவர் தான் ஏதோ ஒரு சபையில் ''சேர்ந்து'' கொண்டதினாலோ, அல்லது தெளிப்பு (அல்லது) ஊற்றுதல் (அல்லது) முழுகுதல் ஞானஸ்தானம் பெற்றதினாலோ மட்டும் கிறிஸ்தவர் அல்ல.

❒ ஒருவர் ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்வதினாலோ, அல்லது, கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளுடன் ஆராதிப்பதினாலோ அவர் கிறிஸ்தவர் அல்ல.

எந்த ஒரு நபரும் இக்காரணங்களினாலோ, அல்லது இதைப்போன்ற எத்தனைக் காரணங்களினாலோ கிறிஸ்தவர் அல்ல. அப்படியென்றால் யார் கிறிஸ்தவர்? என்னோடு கூட நீங்களும் சிந்தியுங்கள்.

❖ ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில், தவறு எது என்றும், சரி எது என்றும் புரிந்துகொள்ளக்கூடியவராக, கணக்கு கொடுக்கும் அளவுக்கு வயதுள்ளவராக இருக்க வேண்டும் (ரோ 14:12). அவரால் தேவனுடைய வார்த்தையை கேட்கவும், புரிந்துகொள்ளவும் மற்றும் தேவனை விசுவாசித்து, இயேசு கிறிஸ்து தேவ குமாரன் என்று விசுவாசிக்க கூடியவராகவும் இருக்க வேண்டும். "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." (ரோம10:17) என்று பவுல் கூறுகிறார். மேலும், ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி 11:6) என்று எபிரெய எழுத்தாளர் கூறுகிறார். இறுதியாக, கிறிஸ்து கூறுகையில், "... தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்." (யோ 14:1) என்றார்

❖ ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில், மனந்திரும்பி தன்னுடைய பாவங்களிலிருந்து விலக வேண்டும். பவுல் கூறும்போது, தேவன்''...மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." (அப் 17:30). பாருங்களேன்! கிறிஸ்து கூறுகையில், ஒன்று நாம் மனந்திரும்ப வேண்டும் அல்லது அழிந்துபோவோம் என்கிறார் (லூக் 13:3)

❖ ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில், தன்னுடைய வாயினாலேயே இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும். ''நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்". (ரோ 10:10). "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்"(மத் 10:32) என்று கிறிஸ்து கூறினார். இயேசுவை தேவனுடைய குமாரன் என்று தன் முழு இருதயத்தோடும் விசுவாசிப்பதாக கூறிய ஒரு எத்தியோப்பிய மனிதனின் உதாரணமும் நமக்கு உண்டு (அப் 8:37). அந்த அறிக்கையின் அடிப்படையில், "... அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்" (அப் 8:38,39).

❖ ஆதலால், ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில், அவர் ஞானஸ்நானம் பெற வேண்டும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மார்கு 16:16) என்று கிறிஸ்து கூறினார். ஒருவர் பாவ மன்னிப்பை பெறும்படி, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என பேதுரு கூறினார் (அப் 2:38). "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோ. 6:3,4) என்று பவுல் மேலும் விளக்குகிறார்.

❖ ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில் சுவிஷேசத்தின் இந்தக் கட்டளைகளுக்கு இரட்சிக்கப்படும்படி கீழ்படிவது மட்டுமன்றி, அந்த தருணத்திலேயே அவருக்கு உறுதியளிக்கப்படுவது என்னவெனில் ''... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார்." (அப் 2:47). இதன் அர்த்தம் என்னவெனில், கீழ்படியும் விசுவாசிகள் தண்ணீரினாலும், ஆவியினாலும் பிறந்தபின், அவர் ஆண்டவருடைய குடும்பத்தின் ஒரு அங்கமாக மாறுகிறார் (யோ 3:3,5: கலா 3: 26,27).